பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 09 ஞாயிற்றுக்கிழமை (23 - 01 - 2000) VALAMPURI ஒலி: 35

23 JAN 2000

## கொழும்பில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு

# முப்படையினர் இணைந்து தேடுதல்

# பெருமளவு இளைஞர் யுவதி கைது!

## 300 பேர் வரை தடுத்துவைப்பு

(கொழும்பு வலம்புரிச் செய்தியாளர்)

**கொழும்பு மாவட்டம் கம்பஹா மாவட்டம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்று அதிகாலை 4 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சுற்றி வளைக்கப்பட்டு பாரிய தேடுதல் நடாத்தப்பட்டது.**

**இத்தேடுதல் வேட்டையின்போது சுமார் 2500க்கு மேற்பட்ட தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்கள்.**

**இச்சுற்றி வளைப்பு, தேடுதல் வேட்டையில் சுமார் 1000க்கு மேற்பட்ட பொலிஸாரும், கடற்படை மற்றும் விமானப்படைவீரர்கள் ஈடுபட்டிருந்தனர்.**

கொழும்பு மாவட்டம், கம்பஹா மாவட்டம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதிகளில் நேற்று அதிகாலை 4 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டு அப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டு பாரிய தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

இத்தேடுதல் வேட்டையின்போது சுமார் 2500றகுமேற்பட்ட தமிழர்கள் வயது பால் வேறுபாடுகள் இன்றி கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டனர்.

முப்படையினரும் கூட்டாகச் சேர்ந்து நடத்திய தேடுதல் வேட்டையில் கொலன்னாவ, வத்தளை ஹெந்தல, நீர்கொழும்பு, ஜாஎல,

(6 ம் பக்கம் பார்க்க)

### அனுதாபச் செய்தி திகதி மாற்றம் தொடர்பாக

## சட்டத்தரணி குமாரின் மனைவியிடம் சந்திரிக்கா மன்னிப்புக் கோரினார்

[கொழும்பு]

கடந்த 5 ஆம் திகதி சுட்டுக் கொலை செய்யப்பட்ட குமார் பொன்னம்பலத்தின் மறைவையொட்டி திருமதி பொன்னம்பலத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அனுப்பிவைத்த அனுதாபச் செய்தியில் இடம்பெற்ற திகதி மாற்றம் தொடர்பாக மன்னிப்புக் கோரும் கடிதம் ஒன்றை திருமதி பொன்னம்பலத்திற்கு ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா எழுதியுள்ள மன்னிப்புக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

ஆன்புடன் திருமதி பொன்னம்பலத்திற்கு:

2000 - 1 - 7 ஆம் திகதிஉங்களுக்கு நான் அனுப்பிய அனுதாபக் கடிதத்தின் திகதி கவனயீனம் காரணமாக தவறுதலாக குறிக்கப்பட்டிருப்பதைகாரணமாகவைத்து சில பத்திரிகைகள் தேவையற்ற ஊகங்களுக்கும் வழிவகுக்க முயற்சித்திருப்பது குறித்து எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்குக் கிழக்கு மாகாணத்தில்

## புதிய ஆசிரியர் தொழிற்சங்கம்

## யாழ்நகரில் இன்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணப் பட்டதாரி ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்திக் கருகிலுள்ள நியூட்டன் கல்வி நிலையத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர்கள் சார்ந்த பிரச்சினைகளைக் கையாள்வதில் இத் தொழிற்சங்கம் முனைப்புடன் செயற்படுமெனவும், அகில இலங்கை ரீதியாக இயங்கும் பட்டதாரி ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பை மேற்கொண்டு வடக்குக் கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுக்கப் பாடுபடுமெனவும் தொழிற் சங்க அமைப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

பட்டதாரி ஆசிரியர்கள் சார்ந்த பல்வகைச் சுற்று நிருபங்கள் இதுவரை நடைமுறைப் படுத்தப் படாமல் இருப்பதாகவும் ஆசிரியர்களின் இடமாற்றம் பதவியுயர்வு, ஆகியவற்றில் வலுவானதும் பொதுவானதுமான கொள்கை இல்லையெனவும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஊரடங்கு உத்தரவால்

## கொழும்புநகரம்வெறிச்சோடிக்காணப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு மாவட்டம், கம்பஹா மாவட்டம்ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை 4 மணி முதல், பிற்பகல்2மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தேடுதல் வேட்டை நடாத்தியமையால் கொழும்பு நகரம் வெறிச் சோடிக்காணப்பட்டது.

ஊரடங்கு உத்தரவை அடுத்து கடைகள் யாவும் பூட்டப்பட்டுக் காணப்பட்டன. கொழும்பு வீதிகளில் மாபாஜ் சந்திவரை வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு கண்டி கொழும்பு றோட்டில் கிரிபத் கொடவுடன்வாகனப்போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது.

## கைது செய்யப்பட்ட தமிழர்களை யோகராஜன் எம். பி. பார்வையிட்டார்

வத்தளையில் ஊரடங்கு அமுலில் இருந்தபோது விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட 2000 தமிழ் இளைஞர்கள், யுவதிகளையும் பார்வையிடுவதற்கு சென்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட எம்.பி. யுமான ஆர். யோகராஜன் கைது செய்யப்பட்டவர்களைப் பார்வையிடச்சென்ற போது பொலிஸார் அனுமதி வழங்க மறுத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆர். யோகராஜன் எம். பி. பிரதிப்பொலீஸ்மா அதிபர் ஓ. கே. கேமச்சந்திராவை சந்தித்துப் பேசி கைது செய்யப்பட்டவர்களைப் பார்வையிடுவதற்கான அனுமதியை பெற்று கைதிகளைப் பார்வையிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## தற்கொலைக் குண்டுதாரி பற்றி தகவல் தருவோருக்கு 20 இலட்சம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை மண்டபவளவுக்குண்டுவெடிப்புத் தொடர்பாக மேலதிக தகவல் தருபவர்களுக்கு 20 இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமெனக் குற்றப் புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

தற்கொலைக் குண்டுதாரி தங்கியிருந்த இடங்கள் மற்றும் அவருக்கு உதவியோர் தொடர்பான தகவல் தருபவருக்கே மேற்படி சன்மானம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

### கொழும்பில் மக்கள் மத்தியில்

## அடிக்கடி இடம்பெறும் சுற்றிவளைப்புகள் தமிழரின் அதிருப்தியையே சம்பாதிக்கும்

(கொழும்பு)

கொழும்பில் அடிக்கடி இடம்பெற்று வரும் சுற்றி வளைப்புகள் மற்றும் கைதுகள் மூலம் கொழும்பு வாழ் தமிழர்கள் மத்தியில் பெரும் கசப்புணர்வு நிலவி வருவதாக சம்பந்தப் பட்டவர்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான கைதுகள் மூலம் உண்மையில் உருப்படியான துப்புகள் எதுவும்

(6ம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாத இரு ஆண்களின் சடலங்கள் வீதி ஓரத்தில் மீட்பு

(வவுனியா)

வவுனியா தெற்கு இலுப்பைக்குளம் பகுதியில் இனந் தெரியாத இரு ஆண்களினது சடலங்கள் வீதிஓரத்தில் இருக்கக்கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அந்தவீதியால் பிரயாணம் செய்த பொதுமக்கள் இச்சடலங்களைக் கண்டுள்ளனர் நடுத்தர வயதுடையஇந்தஇரு ஆண்களினதுசடலங்கள்மீதும் துப்பாக்கிச்சூட்டுக் காயங்கள் எதுவும் காணப்படவில்லை.

சடலத்துக்குரிய இவர்கள் இருவரும் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை

(6ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பால்காய்ச்சும் வைபவம்

[யாழ்ப்பாணம்]

புனர் நிர்மாணம் செய்யப்பட்டுவரும் யாழ். வீரசிங்க மண்டப கட்டடத் தொகுதியில் 1ஆம் மாடியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் காரியாலயத்தில் பால் காய்ச்சும் வைபவம் கடந்த வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் திரு. செ. கு. சண்முகநாதன், திருமதி கோ. திருநாவுக்கரசு திரு-விஜயட்ரணம் ஆகியோருடன் யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். முதுபெரும் கூட்டுறவாளர் திரு, க. இ. குமாரசாமியும் இவ்விழாவில் கலந்துகொண்டார்.



## விஞ்ஞான பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மீள் பரீட்சைகள் 2000

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞான பீடம், குறிப்பிட்ட சில வகை மாணவர்களுக்கு விஞ்ஞானத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் தேர்வுகளின் சகல அலகுகளிலும் மீள் பரீட்சையொன்றைப் பங்குனி/ சித்திரை 2000 இல் நடத்தவுள்ளது.

நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள இம்மீள் பரீட்சைக்குத் தோற்றப் பின்கண்ட வகையைச் சேர்ந்த மாணவர்கள், தகுதியுடையவர்கள்:

(அ) மூன்றாவது வருடக் கற்கை நெறியினை முடித்துக் கொண்டு ஐப்பசி 1999 இல் நடத்தப்பட்ட அரையாண்டு தேர்வுகளில் அல்லது அதற்கு முன்னர் நடந்த தேர்வுகளில் விஞ்ஞானத்தில் மூன்றாம் தேர்விற்கு (இரண்டு அரையாண்டுத் தேர்வுகளுக்கும்) தோற்றிய அனைவரும்,

(ஆ) விஞ்ஞான பீடச் சபையும்/பல்கலைக் கழக மூதவையும் ஏற்கக்கூடிய காரணங்களால் உரியதடவையில் விஞ்ஞானத்தில் மூன்றாம் பரீட்சைக்கு ஐப்பசி 1999 இல் அல்லது அதற்கு முன் தோற்றத் தவறியவர்கள்.

மேலதிக விபரங்களை விஞ்ஞான பீட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சகல பரீட்சார்த்திகளினதும் முதலாம், இரண்டாம், மூன்றாம் தேர்வு மீள் பரீட்சை முடிவுகள் இப்போது வெளியிடப்பட்டுவிட்டன.

- பதிவாளர்.

19.01.2000 (சி/011)

# வவுனியாவில் 13பேர் ராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

(வவுனியா)

வவுனியாவில் இவ்வருட ஆரம்பத்திலிருந்து காணாமல் போன 13 பேர் மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட இணைப் பதிகாரி எஸ். சிறிதரனின் முயற்சியினால் இராணுவத்தினரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

வவுனியாவில் இவ்வருடம் முதலாம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 14 பேர் காணாமல் போனதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்முறையிடப்பட்டிருந்தது.

இம் முறைப்பாட்டினை அடுத்து சிறிதரனின் முயற்சியினால் மேற்படி 13 பேரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்துள்ளது.

எனினும் காணாமல் போன 14 பேரில் ஒருவர் பற்றிய தகவல் இதுவரை கிடைக்கவில்லை. (க-14)

## இன்று நடைபெறும் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கபடிச் சங்கப் போட்டி விதிகளுக்கமைய யாழ்.பிரதேச செயலர் பிரிவினால் நடாத்தப்படும் கபடிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான போட்டியில் பமிலியன்ஸ், சென்.றோக்ஸ், யுத்காமல், குருநகர் கழகம் ஆகிய விளையாட்டுக்கழக அணிகளும் ஆண்களுக்கான போட்டியில் பாரதி சென். றோக்ஸ், கிறீன்பீல்ட், குருநகர் கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்களின் அணிகளும் பங்குபற்றுகின்றன. (க-14

## 304 தபால் பொதிகள் வந்தன

(அச்சுவேலி)

நேற்று முன்தினம் காங்கேசன் துறையை வந்தடைந்த செஞ்சிலுவைச் சங்க கப்பல் மூலம் 304 தபால் பொதிகள் யாழ். பிரதம தபாலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 36 தபால் பொதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு தொகுதி தபால் பொதிகள் எதிர்வரும் 26-ம் திகதி யாழ். வந்தடையும் என தெரிவித்துள்ள அவர், யாழ். வந்தடைந்த தபால் பொதிகள் தரம்பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார் (க-14)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜய் ஷாலினியின்
கண்ணுக்குள் நிலவு
(CD பிரதி)
காட்சிகள்
10. 30, 2: 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார் தேவயானியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

## நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் ஆகக்கூடிய புள்ளிகள் பெற்ற 6 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் க. பொ.த (உயர்தர) மற்றும் ஆண்டு 05 புலமை பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளை பெற்ற மாணவர்கள் ஆறு பேருக்கு புலமைப் பரிசுத் தொகை வழங்க வுள்ளதாக அப்பிரதேச சபைத் தலைவர் மணி பல்லவராஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; 1997ம் ஆண்டு க. பொ. த (உயர்தர) பரீட்சையிலும், சித்தி ஆகக் கூடிய புள்ளிகள் பெற்று பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மூன்று மாணவர்களுக்கும் 1998 ஆம் ஆண்டு -05 புலமைப் பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப்பெற்ற மூன்று மாணவர்களுக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை பி. பகல் 4. மணியளவில் மேற்படி பரிசுத்தொகை நல்லூர் பிரதேச சபை மண்டபத்தில் வழங்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

க.பொ.த (உயர் தர) பரீட்சையில் திறமை சித்தியடைந்தவர்களுக்கு தலா எண்ணாயிரம் ரூபாவும் ஆண்டு -05 மாணவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பரிசுத்தொகை பெறவுள்ளோர் விபரம் வருமாறு; செல்வி. அபிராமி மகாதேவன் (கொக்குவில்) செல்வன் சிவதர்மன் விதாகரன் (கோண்டாவில்), செல்வி. நவரெத்தினம் தயாபரன் (திருநெல்வேலி), செல்வி. விஜேசிகா தர்மகுலசிங்கம் (ஆறுகால்மடம்), செல்வி. சுதர்சினி தங்கராசா (கோண்டாவில்), செல்வி. சாஜிதர் ஜனா வரதராசா (திருநெல்வேலி.)

(க)

## பயிற்சி நெறி

[அச்சுவேலி]

யுனிசெவ் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் மக்களின் பங்களிப்புடனானபோஷாக்கு நிலை முன்னேற்றத் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் சமூக அனுசரணைக்கான பயிற்சியின் 18வது தொகுதி எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெறுமென சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ள இப் பயிற்சியில் ஏற்கனவே தமது பெயர்களை பதிவு செய்த முன்பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளனர். (க-14)

## ஞானச்சுடர் நூல் வெளியீடு

(புலோலி)

சந்நிதியான்ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் ஞானச்சுடர் தைமாத வெளியீட்டு விழா எதிர்வரும் 30ம் திகதி பேரவை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர். ஆறு திருமுருகன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார். யப்பான்கச்சுபின் பல்கலைக்கழகவரவு ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் மதிப்புரையை வழங்குவார். (க-52)

## பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் திரு. எஸ். ஆனந்தபாலன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அமரர். எஸ். நமசிவாயம் புலமைப்பரிசில் நிதியால் கடந்த வருடம் ஆண்டு 5ல் தென்மராட்சியில் அதிக புள்ளிகளைப் பெற்ற மூன்று மாணவர்களுக்கு நிதி அன்பளிப்புச் செய்யப்படும் என மன்றத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (க-77)

## இராசி பலன்

23.01.2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு தை 09)

குருநிலை அதிகாலை 6.48 வரை, மகம் அதிகாலை 3.05 வரை, மரணயோகம், இராகு காலம் மாலை 5.35 முதல் 7.02 வரை, சுபநேரம் காலை 10.05 முதல் 11.36 வரை.

**மேடம்:**
குடும்பப் பகை, தொழில் கஸ்டம், மனவேற்றுமை.

**இடபம்:**
புதிய தொல்லை, கடன் படல், பெண்வெறுப்பு.

**மிதுனம்:**
புதியஸ்தானம், நண்பர் பெருமை, தியானம்.

**கடகம்:**
ஞாபகமறதி, குறைகேட்டல், குடும்பச்செலவு.

**சிங்கம்:**
நோய்தணிவு, இனியசம்பவம், உறவினர்வருகை.

**கன்னி:**
வீண்வம்பு, புரியாதபுதிர், தொழில் மந்தம்.

**துலாம்:**
திடீர் முடிவு, தொழில் வெற்றி, தனவரவு.

**விருச்சிகம்:**
சமரசமுயற்சி, சுபகாரியம், சலகலப்பு.

**தனுசு:**
நழுவல் போக்கு, காரியத் தடை, கோபவார்த்தை.

**மகரம்:**
எதிர்பாராத பிரச்சனை, தடுமாற்றம், கலகம்.

**கும்பம்:**
நியாயம் கற்பித்தல், தொழில் சிறப்பு, சிரமதானம்.

**மீனம்:**
விரோதம் அகலல், தெய்வ வழிபாடு, பாராட்டு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## நீங்கா நினைவில் ஈராண்டு

அன்னை மடியில்; 1969 | 06 | 17



ஆண்டவன் அடியில்: 1998 | 01 | 23

### அமரர் மாணிக்கராசா கேதீஸ்வரன்

இல்லக்குல விளக்காய் எறித்த-முழு நிலவே
வடம் பிடித்த மனையாளின்
உள்ளமதில் கோயிலாக
செல்லக் குழந்தையுடன் – இன்பமுற அன்புருவாய்
பாசத்திற்கு இனியவராய் - வாழ்ந்திருந்த காலை
காலன் கலக்கத்தால் காவு கொண்டான்
காலம் தான் ஈராண்டு சென்றதையா
கலங்கி நாம் கதறுகின்றோம்
உம் நினைவால்----
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளை, குடும்பத்தினர்.

நெடுந்திவு-10 00119

யாழ். மாவட்டத்தில்

# 10 சதவீதமான மாணவர்கள் குடும்பதலைவர்களை இழந்தவர்கள்

## மருத்துவ கலாநிதி தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில் உள்ள 270,000 பாடசாலை செல்லும் சிறார்களைப்பொறுத்தவரை 10 சதவீதமான மாணவர்கள் தமது குடும்பத் தலைவர்களை இழந்தவர்களாகவே உள்ளனர். என்று யாழ். மருத்துவபீட சமூகவியல் மருத்துவர் கலாநிதி எஸ். சிவராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இவ்வாறு குடும்பத் தலைவர்களை இழந்த சிறார்கள் போஷாக்கின்மை, கஷ்ட நிலை போன்ற பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய நிலையிலே தமது கல்வியைத் தொடக்குகிறார்கள்.

குடா நாட்டில் உள்ள சுமார் 480,000 மக்களைப் பொறுத்தவரை அரசின் உலர் உணவு விநியோகத்தையே பெரிதும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய போர் சூழல் காரணமாக தமது அன்றாட தொழிலையே மேற்கொள்ள முடியாது உள்ளனர்.

இதேவேளை பாடசாலை மாணவர்களுக்குரிய பாட நூல்கள் எதுவும் அரசினால் ஒழுங்காக அனுப்பி வைக்காத தன் விளைவாக புத்தாயிரமாம் ஆண்டில் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றுள்ள போதிலும் கூட தமது பாடங்களை உரிய முறையில் கற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் குடா நாட்டின் மொத்த சனத்தொகையில் 7.6 சதவீதமானோர் இடம் பெயர்வு, காணாமல் போதல், தடுத்து வைப்பு போன்ற நிலைகளின் காரணமாக பெரிதும் இன்னலடைந்து வருகின்றனர் என்றார். (க-14)

# சுவீடன் குழுவினர் மூவர் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமைகளை அவதானிக்கும் பொருட்டு சுவீடன் தூதுவராலயத்தைச் சேர்ந்த மூவர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்கிழமை யாழ். வந்த இவர்கள் சுமார் ஒருவார காலத்திற்கு இங்கு தங்கிச் செயலக அதிகாரிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து யாழ். நிலவரங்களைக் கண்டறிவார்கள் என்று தெரியவருகிறது.

இந்த மூவர் கொண்ட குழுவில் செல்வி. இலாமில்கிறைன்டலில் திருமதி. ஸ்லினா ஹேறால்டன் திருடேவிட்வேகிங் ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். (க-05)

# தங்கபுரம் தமிழ் கிராமம் சுற்றிவளைப்பு 1500பேர் வரையில் விசாரணையில்

(திருகோணமலை)

மூதூர் பிரதேசத்தில் தங்கபுரம் தமிழ்க் கிராமம் கடந்த 19 ஆம் திகதி சுற்றிவளைக்கப்பட்டதில் 300 குடும்பங்களைச் சேர்ந்த 1500 பேர் முகமூடிகளால் விசாரணை செய்யப்பட்டதாகவும் இதில் 7 பேர் கைது செய்யப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது பற்றி எந்தத் தகவலும் இதுவரை குடும்பத்தவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-5)

திருமலையில்

# குறிப்பிட்ட பிரதேசம் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு பெரும் தேடுதல்

(திருகோணமலை)

திருகோணமலை வடகரை வீதி. மத்தியவீதி ஆகிய இரண்டு வீதிகளையும் உள்ளடக்கிய பிரதேசம் கடற்படையினராலும் இராணுவத்தினராலும் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இதில் சுமார் 3000 க்கும் அதிகமான பொதுமக்கள் திருகோணமலை மத்திய பஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு முகமூடிகள் முன் நிறுத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 10 இற்கும் அதிகமானவர்கள் தடுத்துவைக்கப்பட்டு மேலதிக விசாரணையின் பின் அவர்களும் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-05)

# காலி வீதியூடாக பாரிய வாகனங்கள் போக்குவரத்து செய்யத் தடை

(கொழும்பு)

ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரிமாளிகை அமைந்திருக்கும் காலி வீதியூடாகக் கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் தவிர வேறு வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீதான கொலை முயற்சியை அடுத்தே பாதுகாப்புத் தரப்பினர் இவ்வாரம் முதல் இத்தடை உத்தரவை அறிவித்துள்ளனர்.

அலரிமாளிகைக்கு முன்பாகவுள்ள காலி வீதியூடாக முன்னர் நான்கு சக்கர வாகனங்கள் சென்றுவர அனுமதிக்கப்பட்ட போதிலும் தற்போது பாரம் குறைந்த கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மட்டுமே இவ்வீதியூடாக செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இப்பாதையூடாகச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள வாகனங்களும் பலத்த சோதனையின் பின்பே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [க-14]

# தென்மராட்சி அனர்த்தத்தினால் குரங்கு குடும்பமும் இடம்பெயர்வு

(தீவகம்)

தென்மராட்சியில் தொடரும் விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் சத்தங்களால் குரங்கு குடும்பமொன்று இடம்பெயர்ந்து கொட்டடிப் பகுதியில் வசித்து வருகிறது.

இக் குடும்ப அங்கத்தவர்கள் அயலிலுள்ள மக்களுக்கு பெரும் துன்பம் விளைவிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இக் குடும்பத்தினரை மனிதாபிமான அடிப்படையில் கொட்டடிப்பகுதி மக்கள் பாதுகாத்து வருகின்றனர். (க)

# கல் உடைக்கும் இயந்திரம் கொள்வனவு

(அல்லைப்பிட்டி)

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரால் கொள்வனவு செய்யப்பட்ட கல்லுடைக்கும் இயந்திரம் நெடுந்தீவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் மூலம் நெடுந்தீவு மக்களின் கட்டடத்தேவைக்கான ''சல்லிக்கல்'' தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்என தெரிவிக்கப்படுகின்றது. (க-46)

# பூசைகள் இன்றி ஆலயங்கள்

(நாவற்குழி)

நாவற்குழி தனங்களப்பு வீதியில் உள்ள பல ஆலயங்கள் பூசையற்று இருப்பதுடன் ஆறுகாலப் பூசைகள் நடக்கும் சனநடமாட்டம் உள்ள நாவற்குழி பகுதியில் உள்ள ஆலயங்கள் கூட ஒரு நேரப் பூசை இன்றி காணப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது. (க-45)

# யாழ். பல்கலை பேரவைஉறுப்பினராக சட்டத்தரணி ஆர். உருத்திரா நியமனம்

(புலோலி)

யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகச் சட்டத்தரணி ஆர். உருத்திரா பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் லண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டதாரியாவார். ஆசிரியத் தொழிலை மேற்கொண்ட இவர் பின்னர் இலங்கைச் சட்டக்கல்லூரியில் கற்று நியாய துரந்தராக (அட்வகேற்) வெளியேறினார்.

கொழும்பு மேல்நீதி மன்றம் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம், அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றம், வவுனியா மாவட்ட நீதிமன்றம், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றங்களில் குடியியல் வழக்குகளில் ஆஜராகி முன்னணியில் திகழ்ந்த இவர் தற்போது யாழ். மாவட்ட நீதிமன்றங்களில் சட்டத் தொழில் புரிந்து வருகின்றார். (க-52)

# இடர்கால கொடுப்பனவுகள் இன்றி கடமைபுரியும் வடமராட்சி ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் கடந்த ஒரு வருடமாக கடமைபுரியும் பயிற்றப்பட்ட நிரந்தர ஆசிரியர்களுக்கு இதுவரையில் இடர்காலகொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, புத்தளம், ஆகிய மாவட்டங்களில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு கஷ்ட நிவாரண அலவன்ஸ் வழங்கப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகளிடம் எழுத்துமூலம் அறிவித்தும் கூட எதுவிதநடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவரவில்லைஎன்றும் சம்பந்தப்பட்டவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

வடக்கு- கிழக்கில்

# க. பொ. த(உயர்தர) மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கப்படும்

## டிவகலாலா தெரிவிப்பு

வடக்கு-கிழக்கில் கல்வி பயிலும் க. பொ. த (உயர்தர) மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளைச்சேர்ந்த 24 வலயங்களிலும் தலா இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இதுதொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறுஅதன் அதிகாரிகளை பணித்துள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (க)

# கசிப்பை ஒழிக்கும் முயற்சியில் நீர்வை இளைஞர்குழு முன்மாதிரி

(கந்தர்மடம்)

நீர்வேலியைச் சேர்ந்த இளைஞர்குழு ஒன்று அங்கு விற்பனை செய்யப்படும் கசிப்பை பறித்து அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த வாரம் கசிப்பு கொண்டு வந்த இருவரை வழிமறித்த இக்குழு அவர்களிடம் மொத்தமாக இருந்த 30 போத்தல் கசிப்பையும் நிலத்தில் ஊற்றியது. அப்போது அவ்விருவரில் ஒருவர் ஒரு போத்தலை எடுத்து குடிக்க தொடங்கியதாகவும் அதனையும் பறித்து ஊற்றியதாகவும் இவ் இளைஞர்குழு மேலும் தெரிவித்தது.

ஏனைய பிரதேசத்து இளைஞர்களும் இப்படியான அதிரடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் கசிப்பை ஒழிப்பதற்கு இது ஒரு வழியாக அமையுமெனவும் அவ் இளைஞர்களில் ஒருவர் தெரிவித்தார். (க-37)

# மரங்களை நாட்டுவதன் மூலம் கிராமத்தின் செழிப்புக்கு உதவுவோம்

## பிரமுகர் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

இயற்கை வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மரங்களை நாட்டுவதன் மூலம் கிராமத்தின் செழிப்புக்கு உதவுவோம்.

புத்தாயிரமாண்டு நிகழ்வை முன்னிட்டு சமீபத்தில் நெடுந்தீவு பிரதேச சபை நடாத்திய மரம் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய முன்னாள் கிராம அலுவலர் நா. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேசசபை தலைவர் அ. வெ. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் கணபதிப்பிள்ளை மேலும் தெரிவிக்கையில்;

முன்னர் போன்று நிறைய மரங்கள் இப்போது இங்கே இல்லை. எமது காலத்தில் மரக்கன்றுகளை நடுவதுடன் நில்லாது வளரும் வரை அவற்றைப் பாதுகாப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தினோம். இன்று மரங்கள் நாட்டப்படுவதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் பொதுமக்கள் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. மழைவீழ்ச்சியும் வளங்களும் பெருகக்கூடியதாக எல்லாப் பகுதிகளிலும் மரங்களை நாட்ட பொதுமக்கள் குறிப்பாக இளந்தலைமுறையும் பொதுத்தாபனங்களும் முன்வர வேண்டும். பிரதேசசபை இன்று அதற்கான அத்திவாரமிடுகின்றது. அது பலமுள்ள ஒரு செயற்பாடாக அமைய உங்கள் ஒத்துழைப்பும் தேவை. என்றார்.

தலைவர் அரியநாயகம் தமது உரையில்: அனேக மரங்கள் நீண்ட காலமாக நிழல்களைத் தந்தவை, முதிர்ச்சியினால் இன்று அவை பட்டுப் போய்விட்டதுடன் தறித்தும் வீழ்த்தப்பட்டுள்ளன. ஒரு மரத்தைத் தறிப்பதற்கு முன் இரண்டு மரக்கன்றுகளையாவது நாட்டவேண்டும் பிறந்தநாள் மற்றும்நமதுமுன்னோர்களின் நினைவு தினங்களில் மரக்கன்றுகளை நாட்டுவோம் என ஒவ்வொருவரும் உறுதி பூணவேண்டும் என்றார். (க-19)

# இருபதாம் நூற்றாண்டின் நிறைவிலும் இலங்கையின்

# கல்வியடைவின் சமச்சீரின்மை - ஒரு கண்ணோட்டம்

(4)

**பாடசாலைகள்**

அநேகமாக சமூக பொருளாதார ரீதியாக பின்னடைந்துள்ள கிராமியப்பாடசாலைகளில் கல்வியில் தாழ் அடைவின்மீது செல்வாக்குச்செலுத்தும் காரணிகள் வறுமையில் நிலைத்திருக்கும் வரையறைகளே என அறியப்பட்டுள்ளது. சமூக பொருளாதார அமைப்புகளினதும், நிலைகளினதும் மீது அடிப்படையாக்கப்பட்ட தற்போதய கல்வி முறைமை அதே சமூகபொருளாதார அமைப்பு நிலைகளையும் நிலைத்திருக்கும். வலியுறுத்தவும், மீளாக்கவும் செய்கின்றது எனலாம். வளங்குறைந்த பாடசாலைகள் சக்தியற்ற சமூகபொருளாதார பின்னணியைப் பிரதிபலிப்பதோடு, அச்சக்திபற்ற சமூக பொருளாதார நிலையை நிலைத்திருக்கவும் செய்கின்றன. மௌன கலாச்சாரமும், வறுமைக்கலாச்சாரமும் இவ்வளங்குறைந்த பாடசாலைகளின் தரவுகளின் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட உண்மைகளாகும்.

வளங்குறைந்த இப்பாடசாலைகள் ஆசிரியர், மேற்பார்வை, வழிகாட்டல் உதவிச்சேவைகள், பெற்றோரின் பங்களிப்பு ஆகியவற்றின் பற்றாக்குறைவினால் பாதிக்கப்படுகின்றன. இங்கு கற்கும் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு கிடைப்பதில்லை. பெற்றோரின் அறியாமை, கீழ் ஆர்வம், பிள்ளைகளை பாடசாலைகளிலிருந்து வெளியேறச் செய்கின்றன. வறுமை காரணமாக பிழைத்திருத்தலுக்காக பிள்ளைகளைக் கூடுதலாக வேலையில் ஈடுபடுத்துவதே பெற்றோரின் போக்காக அமைகின்றது. அவர்களின் வீடுகளில் முறைசார் கற்றலுக்கும் பயிற்சிக்குமுரிய பாரம்பரியங்கள் இல்லை. ஏனெனில் பெற்றோரின் கல்வியறிவின்மையும், ஆர்வமின்மையுமேயாகும்.

சமூகத்தின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கான இப்பாடசாலைகளில் பிள்ளைகள், ஆசிரியர், புத்தகங்கள், (இலவசப்பாடப்புத்தகங்கள் தவிர) துணைச்சாதனங்கள், கற்றல் உதவிச்சாதனங்கள், உதவிச்சேவைகள் ஆகியவற்றின் குறைபாட்டினால் அல்லற்படுகின்றனர். இப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கூட நீண்டகாலம் சேவை செய்ய விரும்புவதில்லை. அவர்களின் கற்பித்தல் முறைமைகள் வளமற்றதாக இருக்கின்றன. புத்தாக்கங்கள் முயற்சிக்கப்படுவதில்லை. மேற்பார்வை நடைபெறுவதில்லை. மேற்பார்வை நடைபெற்றாலும் நிர்வாகம் சார்பாகவே நடைபறுகின்றது. என நாடளாவிய ரீதியில் பெறப்பட்டத கவல்களின் பகுப்பாய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

**பிள்ளைகளின் இயல்புகள்**

வளங்குறைந்த சூழல்களில் பிறந்தோர் தமது உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்து கொள்வதையும் இழக்கின்றனர். வசதி குறைந்த பகுதிகளிலுள்ள வளங்குறைந்த பிள்ளை போசாக்கின்மையும், பலவீனமும், நோய்வாய்ப்பட்டும் இருப்பதோடு எதுவித ஊக்குவிப்பையும் பெறுவதில்லை. அவர்கள் உடல் ரீதியாக குறைவளர்ச்சியடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் பாடசாலைகளில் சமூகமளித்தலும் ஒழுங்கற்றதாக உள்ளது. இது அவர்களை கல்வியில் பின்தங்கியவர்களாக, மந்தமாணவர்களாக ஆக்கும் காரணிகளாக அமையலாம். இவர்கள் கல்வியில் எந்த அக்கறையும் காட்டாது அவர்களது சமூக பொருளாதார நிலை காரணமாக பாடசாலைக்கு விருப்பக் குறைவுடன் வந்து போவதையும் ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன.

**பாடவிதானம்**

இலங்கையில் ஆரம்பப் பாடசாலைகளுக்கான புதிய கணிதப்பாட விதானம் 1984 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் இம்மாற்றங்களின் சிந்தனையையும், நோக்கங்களையும் விளங்கிக் கொள்ள பொருத்தமான கற்பித்தல் துறைகளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் பயனளிக்கவில்லை. காலத்திற்கேற்ப கற்பித்தல் முறையியல் முன்னேற்றமடைந்த போதும் குறைவசதியுள்ள பிள்ளைகளை அது சென்றடையவில்லை.

உண்மையில் குறைவசதியுள்ள பிள்ளைகட்குப் பொருத்தமானவாறு முறையியலும் மாற வேண்டும், அடைவு மட்டங்கள் உயர வேண்டுமெனின் கற்பித்தல் முறையியலுக்கும் உரிய வலியுறுத்தல் வழங்கப்பட வேண்டும். பாடசாலையை இடையில் விட்டுச் செல்வதற்கோ அல்லது ஆரம்பக் கல்வி மட்டத்தை விட்டுச் செல்வதற்கோ முன்னர் அடிப்படைத் திறன்களை ஒவ்வொரு பிள்ளையும் அடைவதை உறுதிப்படுத்தும் விதத்தில் குறிப்பாக ஆரம்பப் பாடசாலைகளில் மதிப்பீடு திறன்சார்ந்ததாக அமையவில்லை என ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆசிரியர்களுக்கு அடிப்படை கற்பித்தல் சாதனங்களை தாயாரிக்கக்கூடிய விருப்பும், ஆற்றலும் உண்டு. எனினும் வசதியற்ற பாடசாலைகளில் அவற்றை களஞ்சியப்படுத்தக்கூடிய வசதி இன்மையால் ஆசிரியர்கள் அவற்றைத் தயாரிப்பதில் எந்த முயற்சியும் எடுக்க விருப்புக்காட்டுவதில்லை எனவும், சிலர் தமது வீடுகளில் கற்பித்தல் சாதனங்கள் இருப்பதாகவும், ஆனால் நெருக்கடியான பேருந்தில் அங்குமிங்கும் அவற்றை தூக்கிக் கொண்டு வரமுடியாததால் அவற்றை பயன்படுத்துவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர். இவ்வாறான கற்பித்தலில் வசதியற்ற கிராமியப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் அடைவு உயரும் என எதிர்பார்க்கலாமா?

**உதவிச் சேவைகள்**

குறைவசதியுள்ள பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு எண்ணக் கருக்களின் அமைப்பை இலகுவாக்குவதற்கு எவ்வித துணைச் செயல் நூல்களோ, கற்பித்தல் உதவிச்சாதனங்களோ கிடைப்பதில்லை. மேலும் நூலகங்கள், புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகிய வசதிகளும் கிடைப்பதில்லை. இதனால் அவர்கள் குறிப்பாக மொழி கணிதத்திறன்களைப் பெறுவதற்குரிய வாசிக்கும் திறனைப் பெறுவதற்குத் தடையாகவுள்ளது. குறை வசதியுள்ள பாடசாலைகளினுள்ள வாசிப்பதற்குரிய துணைச்சாதனங்கள் இல்லாதிருக்கையில் அப்படி ஏதும் கிடைக்கப் பெற்றாலும் அது பிள்ளைகளுக்கு பொருத்தமானதாக இராது.

வாசித்தலானது எழுதுவதை விட மிகச்சிக்கலான பணியாகும். வாசிக்கும் ஆற்றலிலும் எழுதும் ஆற்றலிலும் குறைந்த வீதத்தினரே அடைவைக் காட்டுகின்றனர் எனவும் அறியப்பட்டுள்ளது. அநேகமாக ஆசிரியர்களுக்கு ஆரம்பப் பாடசாலைகளில் மொழி கற்பித்தலுக்கான போதியளவு பயிற்சி வழங்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது. மொழி கற்பிக்கும் முறையானது இன்றும் பாடநூலிலிருந்து உரத்து வாசித்தலும், மனனம் செய்தலுமாகிய பாரம்பரிய முறைகளேயாகும். எனவே ஆரம்பப் பாடசாலைகளில் மொழி கற்பித்தலுக்காக புத்தாக்க முறைகள் விருத்தி செய்யப்பட வேண்டிய அவசியமுண்டு.

வளங்குறைந்த பாடசாலைகளில் கணிதம் தொடர்பாக கணிதத்தில் செயல் நூல் இல்லாததும் பெரும் குறையாக காணப்படுகின்றது: பாட நூல்களை விட செயல் நூல் கூடிய செயன்முறைப் பெறுமானம் உள்ளதாக அமையும் எனவும், அது செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்பித்தல் முறைகளுடன் நெருக்கமாகப் பிணைந்திருக்க வேண்டுமெனவும், இதனால் வாய்மொழி ஊடகத்தின் தாக்கம் நீடிக்கப்பட்டுவிடுமெனவும், செயல்நூல் பிள்ளையின் பதிவேடாகவும் செயற்படும் எனவும் பல ஆசிரியர்களின் கருத்தாகவுள்ளது.

தற்போதைய நிலையில் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்ட போதிலும் காகிதாகிகளும் எழுதுகருவிகளும் விலைக்கு வாங்கப்பட வேண்டியுள்ளன. பயிற்சிப் புத்தகங்களின் விலை அதிகரிப்பதால் வறியவர்களுக்கு எல்லாப் பாடங்களுக்கும் தனித்தனிப் பயிற்சிப் புத்தகங்கள் வாங்க முடிவதில்லை. வறிய பிள்ளை பயிற்சிப்புத்தகம் வாங்கினாலும் வீட்டிலுள்ள வசதி குறைவின் காரணமாக அதனை சுத்தமாகவும், கிழியாமலும் வைத்திருப்பதுசாத்தியமில்லை.

**பாடசாலை அதிபர்**

பாடசாலை அதிபரே பொருத்தமான வளங்களை ஒன்று திரட்டக்கூடிய முக்கிய நபராவார். பாடசாலையின் வெற்றி அதிபரையே சாரும்- எனவே வளங்குறைந்த குறைவசதி பகுதிகளிலுள்ள பிள்ளைகளின் பாடசாலைகளில் அடைவை மேம்படுத்துவதற்கானபொறுப்பு அதிபருடையதாகும். பாடவிதானமும், அதன் நோக்கங்களும் இலக்குகளும், கற்பித்தல் முறைகள், ஆசிரியர் தேவைகள், செலவு குறைந்த கற்பித்தல் உதவிச்சாதனங்களை தயாரித்தலும், பயன்படுத்துதலும், கற்பித்தலை மதிப்பீடு செய்தல் என்பவற்றில் அதிபருக்கு போதிய விளக்கமின்மை இருப்பின் அது முழுப் பாடசாலையையும் தாழ் அடைவிற்கு இட்டுப் செல்லும். எனவே அதிபரின் திறமை குறைவசதியுள்ள சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

குறைவசதியுள்ள கஷ்ட பிரதேசங்களுக்கு அனுப்பப்படும் பாடசாலை அதிபர்கள் அவர்களது விருப்புக்கெதிராகவே அனுப்பப்படுவது துரதிஷ்டவசமாகும். இதுவொன்றே பாடசாலைத் தலைமைத்துவத்தில் குறைந்த மனவுறுதியை உருவாக்கும். இவ்வாறான இடங்களுக்கு அதிபர்களை நியமித்தலில் விசேட கவனத்துடன் செயற்படவேண்டும். சேவை விருப்புள்ள, கடமையில் அர்ப்பணிப்புள்ள சமூகத்தீங்குகளை எதிர்த்துப் போராடக்கூடிய அதிபர்களையே நியமிக்க வேண்டும். அவர்களுக்கு மேலதிக கவனிப்பும் அவர்களது மனவுறுதியை காக்க வழிகாட்டலும் வழங்கப்படல் வேண்டும். இவ்வாறான கஷ்ரமான பாடசாலைகளில் சேவைபுரியும் அதிபர்க்ளுக்கு சமூக தலைமைத்துவத்திலும், முகாமைத்துவத்திலும் விஷேட பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் பாடசாலையின் சமூகத்துடன் வாழ்வதற்குரிய வசதிகளையும் வழங்க வேண்டும்.

(நாளை தொடரும்)

- த. காங்கேசபிள்ளை -

(விரிவுரையாளர் பலாலி ஆசிரிய கலாசாலை)

---

## இலங்கையில்

# உல்லாச பயணிகளின் வீழ்ச்சி பொருளாதாரத்தை பாதிக்கும்

### -பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கை

[கொழும்பு]

இலங்கைக்கு வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் தொகை அண்மைக் காலத்தில் வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளமையானது அந்நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென பொருளியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பு நகரிலும் அதனை அண்டிய சுற்றுப்புறங்களிலும் அடிக்கடி நிகழ்கின்ற குண்டுவெடிப்புகளின் காரணமாகவே இலங்கை வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை இவ்வாறு குறைவடைந்துள்ளது.

இதே வேளை இலங்கை வருவதற்காக பல்வேறு விடுதிகளிலும் பதிவுகளை மேற்கொண்டிருந்தஉல்லாசப் பயணிகள் தமது பதிவுகளை ரத்துச் செய்ததுடன் இலங்கைக்கான வரவினையும் ரத்துச் செய்துள்ளனர்.

(க-14)

# தடுத்துவைக்கப்பட்ட இளைஞர் விடுதலை

(அச்சுவேலி)

கடந்த 16ஆம் திகதி இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த புத்தூர் கிழக்கு ஆவரங்கால் பகுதியை சேர்ந்த மயில்வாகனம். ரகுபாலரமணன் (23 வயது) என்பவர் 18ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் நீர்வேலி இராணுவ முகாமில் வைத்து கிராமசேவையாளர் குலேந்திரநாயகம் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

(க-14)

# கிராம அலுவலரின் வீட்டில் துணிகர திருட்டு இடம்பெற்றது

(புலோலி)

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்க நள்ளிரவுவேளையில் கிராமசேவை அலுவலரொருவரின் வீட்டில் திருட்டுக் கோஷ்டியொன்று துணிகரமாகத் தனது கைவரிசையைக் காட்டியுள்ளது. இத்திருட்டுச்சம்பந்தமாகப் பருத்தித்துறைப்பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் திருடர்கள் மீது தேடுதலையும் முடுக்கி விட்டுள்ளனர்.

புலோலி மந்திகையில் உள்ள கிராமசேவை அலுவலர். திரு.ரீ. நந்தகுமார் வீட்டிலேயே இத்துணிகரத் திருட்டு இடம் பெற்றுள்ளது. இரவுவேளை இவர்கள் நித்திரையிலிருக்க இவ் வீட்டிலிருந்த லேடீஸ் சைக்கிள்கள் இரண்டு, நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று உட்பட 35,000 ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடியுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

(க-52)

# புதிய இடத்தில் செயற்படும்

புலோலி கமநல சேவை நிலையம் கரவெட்டி விவசாயிகளின் நலன்கருதி கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலுக்கு அருகாமையில் கட்டடம் அமைத்துள்ளது.

இம்மாத இறுதியில் ஆரம்பிக்க இருக்கும் இக் கட்டடத் தொகுதியில் உள்ளீட்டு விற்பனை நிலையமும், விவசாயிகள் கூடமும் அமைந்துள்ளது.

இச்சேவை மூலம் கரவெட்டி பிரதேசமக்கள் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(க-23)

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி.

- குறள்

# வலம்புரி

## பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்

புண்பட்டுழந்து பண்பட்ட பாரதியின் புனிவாக்கு பிறந்த மண்பற்றியது. அதன் மகத்தான தாக்கம் நாங்கள் உணர்ந்த தொன்றே. அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அவலம் நிறைந்த வாழ்வினால், யுத்தமேகங்களின் அலைப்பினால் இடம் பெயர்ந்து இன்னல் படும் எம்மவரைப்பற்றி சிந்திக்க வேண்டியது எம்கடனாகும்.

குறைந்தபட்சத்தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலையில் வாழும் மக்களை கைதூக்கி விடுவதற்கு உரிய பல நடவடிக்கைகள் எடுப்பதுசாலப்பொருத்தமானதே. உடுக்கை இழந்தவன் கைபோல அவர்கள் இடுக்கண் களைய முற்படவேண்டும்.

புலம் பெயர்ந்துமேற்கு நாடுகளில் வாழ்பவர்கள் பல அறப்பணிகளுக்கு உதவுவது கண்கூடு. அவ்வாறே உடன்பிறப்பானவர் துடிக்கின்ற வேளை துயர்துடைக்க வேண்டும். அறநிதியம் உருவாக்குதல் பொருத்தமானதே. பிடி அரிசி கொண்டு தொண்டு செய்த நாவலனை மறக்க முடியாது. அப்பெருமகன் அடியொற்றி வன்னியில் சென்னீரும் கண்ணீருமாக வாழ்வோர்க்கு வழிசமைக்க வேண்டும்.

பிறநாட்டு நிறுவனங்கள் கொள்ளும் அக்கறையோடு நாமும்உதவுவோம் என்ற நல்லெண்ணம் இன்று வரைஎமக்கு உதயமாகவில்லை. மேற்குலகில் எம்மவரும் நாமும் கைகோர்த்து உடன் வாழ்ந்தோர்க்கு உதவுகரம் நீட்டுவோம். முல்லைவாழ் பல்கலை மாணவர் முன்னிற்று குடாநாட்டில் இடம் பெயர்ந்தோர்க்கு உதவியது இப்பந்தியில் பாராட்டப்பட்டது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவர்கள். ஆங்கோர்ஏழைக்கு எழுத்தறிவித்தல் கோடி புண்ணியமே. ஆதலால்-பிறந்துதவழ்ந்தமண்ணை வருடக்கணக்கில் பிரிந்தவர்களின் இதயச்சுமை ஒரு புறம் வாட்டும் வேளை இயன்றபணிக்கு இதயங் கொள்வோம். சொல்லும் செயலுமாய் நெஞ்சார நிமிர்ந்து நிற்போம்; நிறைவு செய்வோம்.

அன்புடன் ஆசிரியர்

# காத்தான்குடி-கல்லடி வீதியில் பொலிசார் தீவிர கண்காணிப்பு

(மட்டக்களப்பு)

கல்லடியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தையடுத்து காத்தான்குடி- கல்லடி நெடுஞ்சாலையில் பொலிசாரும், படையினரும் கண்காணிப்பு நடவடிக்கையிலீடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அடிக்கடி பொலிஸாரும், விஷேட மோட்டார் சைக்கிள் படையினரும் ரோந்துப் பணியிலீடுபட்டு வருகின்றனர் அப்பகுதியில் நெடுகிலுமுள்ள மரங்கள், கொப்புகள், மறைவான பகுதிகள் வீட்டுச் சொந்தக்காரர்களினால் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. படையினரே இதற்கான உத்தரவைப்பிறப்பித்திருந்தனர்காத்தான்குடியிலிருந்து கல்லடிப் பாலம் வரையிலான நெடுஞ்சாலை இப்போது தூய்மையாகக் காட்சியளிக்கிறது. குப்பை, கூழங்கள் அகற்றப்பட்டுஅடர்த்தியாக வளர்ந்து கிடந்த மரங்கள் தறிக்கப்பட்டு நீண்ட காலத்திற்குப் பிறகு இப்பகுதி துப்பரவு செய்யப்பட்டுள்ளது. (க-60)

## ஐ. தே. கட்சி தேசிய பட்டியல்

# வெற்றிடத்திற்கு சேகுஇஸ்ஸதீனை நியமிக்கும் முடிவு இடைநிறுத்தம்

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் வெற்றிடத்திற்கு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சேகு இஸ்ஸதீனை நியமிப்பதென கட்சியின் தலைமைப்பீடம் எடுத்த முடிவு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஐ. தே. க. வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

அம்பாறைமாவட்டக் கரையோரப் பிரதேசத்தில் ஐ. தே. க. வுக்காக நீண்ட காலம் உழைத்த சிரேஷ்ட முக்கியஸ்தர்கள் பலர் இருக்கையில் இஸ்ஸதீனுக்கு எம். பி. பதவியை வழங்குவது அநீதியானதென கட்சி முக்கியஸ்தர்கள் போர்க்கொடி தூக்கியதையடுத்தே தலைமைப்பீடம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இதேவேளை ஐ. தே. க. வில் அண்மையில் இணைந்து கொண்ட இஸ்ஸதீனுக்கு இந்த எம். பி. பதவியை வழங்க ஐ. தே. க. செயலாளர் முடிவுசெய்திருந்தமை குறித்து அம்பாறை மாவட்டத்தில் பெரும் சர்ச்சை நிலை எழுந்துள்ளது.

(க-14)

# பரு. நகர சபைத் தலைவரின் கொலை கண்டிக்கத் தக்க ஒன்று

## சாவகச்சேரி நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

பருத்தித்துறை நகரசபை தலைவர்வடிவேலு.விஜயரட்ணம், மற்றும் நகரசபை ஊழியர் முதலி. பகீரதன் ஆகியோரது கடந்த 14 ஆம் திகதி படுகொலைச் சம்பவம் பெரிதும் கண்டிக்கத்தக்கது என சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

தொடரும் மனித உயிர் அழிவுகள் மன்னிக்க முடியாதவை. இத்தகைய சம்பவங்கள் எமது மண்ணில் தொடர்ந்து கொண்டிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (க)

# தமிழர் தொடர்பான தரவுகளை ஆவணப்படுத்தும் நிகழ்வு இன்றுமுதல்

(கண்டி)

உலகத் தமிழர் ஆவணக் காப்பக நிறுவனத்தைச் சேர்ந்த குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் கடந்த 40 ஆண்டுகாலமாக உலகத்தமிழர் தொடர்பாக சேகரித்த தரவுகளை நுண் நிழற்படச் சுருளில் (மைக்ரோ பிலிம்) பதிவு செய்யும் நிகழ்வு இன்று கண்டி காப்பக பணிமனையில் இடம்பெறவுள்ளது.

பி. ப. 2-30 மணியளவில் இந்நிகழ்வில் பேராசிரியர்களான சிவத்தம்பி பத்மநாதன், சந்திரசேகரம், சிவராஜா, அருணாசலம் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் துரை மனோகரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

நோராட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கொழும்பு லேக்ஹவுஸ் முதலீட்டு நிறுவனம் மேற்படி பணியை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. (க-9)

# இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வெள்ளாந்தெரு பகுதியைச் சேர்ந்த இரத்தினம் இரகுநாதன் (24 வயது) என்பவர் கடந்த 19ஆம் திகதி அன்று ஊரெழு இராணுவத்தினரால் அவரது வீட்டில்வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது மனைவி கலைவாணி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம்முறைப்பாடு செய்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள நபர் ஏற்கனவே இராணுவத்தினரால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தவர் இவரது கைது தொடர்பாக அவரது குடும்பத்தாரிடம் இராணுவத்தினரால் ரசீது வழங்கப்பட்டுள்ளது. (க-14)

# சுவீடன் குழு இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுவீடன் ஸ்தானிகராலய பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று இன்று ஞாயிறு பிற்பகல் 4.45 மணியளவில் திருமறைக்கலா மன்றத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இவர்களை வரவேற்கும் முகமாக சிறுவர் கலைக்கூடப் பிள்ளைகள் மற்றும் பயிலக மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 550 வீடுகள் அமைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டிருப்பு தேர்தல் தொகுதியில் 550 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி பிரதம அமைப்பாளர் சோ. கணேசமூர்த்தியின் வேண்டுகோளின் பேரில் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரஃப் இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளார். (க-60)

## உத்தரப் பிரதேசத்தில்

# தொடரும் வேலை நிறுத்தத்தால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவு

(புதுடில்லி)

அரசுசார்பு மின்சார சபையை மூன்று தனியான பிரிவுகளாக வகுப்பதற்கான உத்தரப் பிரதேச மின்சார சபையின்தீர்மானத்திற்கு, எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மின்சார சபை பொறியியலாளர், ஊழியர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டம் இன்று 9வது நாளாகவும் தொடர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக மாநில அரசிற்கும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் தொழிலாளர் பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று முன்தினம் இரவு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாகவும் இருதரப்புமே தங்கள் நிலைப்பாடுகளினின்றும் விட்டுக் கொடாமையால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவுற்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

தொடர்ந்தும் நடைபெற்று வரும் வேலை நிறுத்தத்தினால் மக்களடைந்து வரும் பாதிப்புக்களை நீக்கும் பொருட்டு ஆயிரக்கணக்கான உதவிப் பொறியியலாளர்களை வெகு விரைவில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களது இடத்துக்கு நியமிக்க விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 2000 இற்கு மேற்பட்டஇளநிலை பொறியியலாளரும் 1600 இதர ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இருந்து விலகி திரும்பவும் பணியில் இணைந்திருப்பதாக மாநில எரிசக்தித்துறை அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். க-9)

# சீனாவிற்கு அழைப்பு

(டோக்கியோ)

ஜப்பானில் ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜி-8 நாடுகளின் மாநாட்டிற்கு முன்னதாக சீனப் பிரதமர் ஸூ ஹொங்கியை ஜப்பானுக்கு விஜயம் செய்யுமாறு ஜப்பான் அரசு சீனாவிற்கு அழைப்பு விடுத்துள்ளது. (க-14)

# முக்கிய தளங்களை கைப்பற்றியதாக ரஷ்யப் படையினர் தெரிவிப்பு

(குறொஸ்னி)

செச்செனியாவின் தலைநகரான குறொஸ்னிப் பகுதியில் போராளிகளின் பல முக்கிய தளங்களை தாம் கைப்பற்றியவாறு முன்னேறி வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

கைப்பற்றிய பிரதேசங்களை அண்டிய நகர்களில் போராளிகளின் நடமாட்டங்கள் அதிகமாகக் காணப்படுவதால் அப்பகுதிகளில் தாம் பீரங்கித் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருவதாகவும் ரஷ்யா மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரஷ்யப் படையினரை தாம் இராணுவத் தந்திரோபாயங்களிற்காகவே முன்னேற அனுமதித்திருப்பதாகவும் இத்தந்திரோபாயம் இராணுவத்தினர் மீது சுற்றி வளைத்து தாக்குவதற்கு இலகுவாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ள செச்செனியப் போராளிகள் ரஷ்யப் படைகள் எத்தகைய மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டாலும் தாம் அத்தகைய தாக்குதல்களை எதிர் கொள்ளத் தயார் என்று அறிவித்துள்ளனர்

செச்செனியா மீதான தாக்குதல் நிறுத்த முடிவை ரஷ்யா மாற்றிக்கொண்டதையடுத்து செச்செனியா மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-14)

# புத்தாண்டில் கிரகணங்கள்

(ஹைதராபாத்)

இவ்வருடம் 4 சூரிய கிரகணம், 3 சந்திர கிரகணம் உட்பட 7 கிரகணங்கள் தோன்ற இருப்பதாக இந்திய பி. எம். பிர்லா அறிவியல் மையத்தின் இயக்குநர் பி. ஜி. சித்தார்த் தெரிவித்திருக்கிறார்.

சென்ற நூற்றாண்டிலோ அல்லது இனி வரப்போகின்ற இரு நூற்றாண்டுகளிலோ இவ்வளவு கிரகணங்கள் ஏற்பட்டதோ ஏற்படவோ போவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இதனை இந் நூற்றாண்டின் வான அதிசயம் எனப்பலரும் விமர்சித்துள்ளனர். (க-9)

# இராஜினாமா

(பேர்லின்)

ஜேர்மனியில் நீண்டகாலம் சேவை புரியும் தலைவரான றெல்மட்றோஸ் தமது கட்சியின் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

(க-14)

### பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை

# கடற்றொழிலாளரின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கரையோரப் பகுதியில் தொடர்ந்துகொண்டிருக்கும் யுத்த நிலைமை காரணமாக கடந்த ஒருமாதத்திற்கும் மேலாக தொழில் புரிய அனுமதியின்றிக் கஷ்டத்தின் விளிம்பிற்குத்தள்ளப்பட்டிருக்கும் பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர் ஆகிய கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் பெரிதும் இன்னலுறுவதைத் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

மேற்கண்டவாறு குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை வாழ் மக்கள் மேன்மை மிகு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க விஜய குமார துங்கவிற்குஅனுப்பிய அவசர மகஜரில் தெரிவித்துள்ளனர்.

அ... ஜ... ...லும தெரிவிக்கப்பட்டு எதாவது:

**கடலில் முடக்கம்:**

மூன்று கிராமத் தொழிலாளர்களில் 1300 பேருடைய தொழில் ரீதியாக வேறுபாடுடைய பெறுமதி மிக்க கடற்றொழில் உபகரணங்கள் கடலில் முடக்கப் பட்டுள்ளது. சில தொண்டர் நிறுவனங்களுடன் அரசாங்கத்தின் உதவியாலும் எமது முயற்சியாலும் உருவாக்கிய எமது முதல்கள் கடலில் அழிந்து கொண்டிருப்பதை எம்மால் ஜீரணிக்க முடியாதுள்ளது. இவற்றின் பெறுமதி ஏறக்குறைய 30 கோடி ரூபாய்கள் ஆகும்.

**பயனற்ற தொழில் முதல்கள்**

கடந்த ஆண்டு டிசம்பர் தொடக்கம் இன்று வரையும் ஏற்கனவே நாம் தொழில்களை கடலில் போட்ட திகதியை ஒப்பிடும் போது கிட்டத்தட்ட 80 நாட்கள் எமது முதல்கள் கடலில் அழிந்து கொண்டிருக்கின்றன. இந்நாட்கள் மேலும் தொடருமாயின் ஒட்டு மொத்தமாக முழு உபகரணங்களும் பயனற்றதாகிப் போய்விடும். ஏற்கனவே நாம் 90, 95 ஆண்டுக்காலப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது பல நூறு கோடி பெறுமதியான தொழில் உபகரணங்களை இழந்ததை தாழ்மையுடன்நினைவூட்டுகின்றோம்.

**தாழ்மையான வேண்டுகோள்**

கடலில் அழிந்து கொண்டிருக்கும் எமது வருவாயின் ஆதாரமாகிய தொழில் உபகரணங்களை கரைப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி தொடர்ந்து எமது பகுதியில் எவ்வித அழுத்தங்களும் இல்லாமல் தொழில் செய்ய வழிசமைத்து தருவதுடன் எமது தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும் வரை அவர்களது குடும்பச் செலவுக்காக ஒரு குறிப்பிட்ட நிதி வழங்கவும் அழிந்த எமது தொழில் முதல்களைச் சீர் செய்வதற்கு நஷ்ட ஈட்டுடன் மானிய அடிப்படையிலோ, கடன் அடிப்படையிலோ தொழில் உபகரணங்களை வழங்கி எமது மக்களுக்கு சுபீட்சமான எதிர் காலத்திற்குவழி சமைத்துக்கொடுக்குமாறு தங்களை மிகவும் பணிவுடனும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தப்பட்ட பிரதிகள் கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் கடற்றொழில் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஈ.பி.டி.பி.அமைப்பினருக்கும் இம்மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம். (க)

## விமானத் தாக்கு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த கடற்கரையோரப் பகுதியில் நேற்று நண்பகல் அளவில் விமான தாக்குதல் இடம் பெற்றது.

இத் தாக்குதல் குறித்த சேதம் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (க)

**சட்டத்தரணி...**

இத்தகைய தவறுக்காக நான் பெரிதும் வருந்துகின்றேன்.

எனது அலுவலகத்தின் இத்தவறு ஊடாக உங்களுக்கு நான் மனவேதனையைத் தந்திருந்தால் மிகவும் மனப் பூர்வமாக மன்னிப்பு கோருகின்றேன்.

இதற்கான காரணத்தை நான் ஆராய்ந்தேன்.பல்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட்ட நபர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் மாதிரிகள் எனது அலுவலகத்தின் கம்பியூட்டர்கள் சேமித்து வைத்திருப்பதை அறிந்து கொண்டேன்.

ஊரடங்குச்சட்டம் பிறப்பித்த தினத்தன்று சிலஅவசரமான பணிகளுக்கு சமூகமளித்திருந்த ஒரு அதிகாரியிடம் உங்களுக்கான அனுதாபக்கடிதத்தை தயார் செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது அந்த அதிகாரி அவ்வாறு செய்கையில் முன்பு ஒருமுறை அனுப்பப்பட்ட போது அனுதாபக் கடிதத்தில் பொறிக்கப்பட்டிருந்த திகதியை மாற்றாமலேயே அவசரத்தில் எனது கை ஒப்பந்தத்திற்கான கடிதத்தை சமர்ப்பித்து விட்டார்கள். சிறு தவறுகளைக்கூட நான் வழமையாக பரீசிலனை செய்து சரி செய்து கொள்வேன்.

ஆனால் இப்போது என்னால் ஒரு கண்ணால்தான் பார்க்கமுடியும் என்பதால் இத்தவறு என்னிடம்பிடிபடாமல் தப்பிவிட்டது. இத்தவறுகளுக்கான காரணங்கள் குறித்து குறிக்கப்பட்ட பத்திரிகைகள் ''இட்டுக் கட்டும்'' செய்திகளை முற்றாக நிராகரிக்கின்றேன்

உண்மையில் முற்றிலும் அப்பாவித்தனமான ஒரு தவறுக்காக ஆதாரமற்ற குற்றங்களை சுமத்த முயற்சிக்கின்றமைக்காக அவர்ளுக் கெதி சட்டநடவடிக்கைஎடுப்ப துகுதும் நான்ஆராய்ந்து வருகிறேன்.

**முப்படையினர்...**

கொச்சிக்கடை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேடுதல் தீவிரம் அடைந்திருந்தது. இப்பகுதிகளில் பொலிசாரும் கடற்படையினரும் வீடுவீடாகச் சோதனையிட்டு தமிழ் இளைஞர்கள், யுவதிகளை கைது செய்து சென். அன்ரனிஸ் பாடசாலை மைதானத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தனர். விசாரணையின் போது தமிழ் இளைஞர்கள் தலையாட்டி முன் கொண்டு செல்லப்பட்டதோடு வீடியோ படம் எடுக்கப்பட்டது.

நீர்கொழும்பு, கொச்சிக்கடைப் பகுதியில் 100க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு விஜரத்தினமாவத்தைக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

ஜாஎலப் பகுதியில் 200க்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். அப்பகுதி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 2500 பேரில் 300 பேர் மட்டுமே மேல் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன, (வ)

**புதிய ஆசிரியர்..,**

இது விடயத்தில் புதிய தொழிற் சங்கம் காத்திரமாகத் தொழிற்படுமெனவும் அச் சங்கத்தின் அமைப்புக் குழுவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரி ஆசிரியர்களின் உரிமையை வென்றெடுக்கும் இப் புதிய ஆசிரியர் தொழிற் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சகல ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் அமைப்புக் குழுவினர் கேட்டுள்ளனர்.

**இனந்தெரியா....**

செய்யப்பட்டு ச...லங்கள் இங்குகொண்டுவந்து போடப்பட்டிருக்கலாம் என அறிக்கைகள் தெரிவித்தன.

**அடிக்கடி . . .**

கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

இத்தகைய சம்பவங்கள் தமிழர்களின் அதிருப்தி நிலையை சம்பாதிப்பதாகவே உள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கைது மற்றும் சுற்றிவளைப்புகளில் பெருமளவு தமிழ் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கொழும்பில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டு வருவதும் அவர்கள் மீது தீவிர விசாரணைகள் இடம் பெற்று வருவதும் எற்கனவே தெரிந்தவையே. (க)

# சுரேஷ் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டால் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்படும்

## இல. அரசுத் தரப்பில் தெரிவிப்பு

(ஒட்டாவா)

கனடாவில் வாழும் இலங்கையரான சுரேஸ் மாணிக்க வாசகம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவராயின் அவரிற்கு உரிய பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு தயாராக உள்ளதாக கனடாவிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவரை சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு கனடிய ஒட்டாவா சமஸ்டி நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்தே இந்த உறுதியை இலங்கை அரசு வழங்கியுள்ளது.

சுரேஸ் நாடு கடத்தப்படும் பட்சத்தில் ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் சகல வசதிகளையும் இவரிற்கும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

# படைத் தளபதியின் இறுதிச்சடங்கு நேற்று நடைபெற்றது

(கொழும்பு)

மாரடைப்பால் மரணமான யாழ். மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் நிகால் ஜெயக்கொடியின் இறுதிச் சடங்குகள் கனத்தை மயானத்தில்நேற்று(சனிக்கிழமை) பிற்பகல் முழு இராணுவ மரியாதைகளுடன் இடம் பெற்றது,

யாழ்ப்பாணத் தளபதியின் மறைவுக்கு ஜனாதிபதி தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார். நிகால் ஜெயக்கொடியின் இழப்பு நாட்டின் தற்போதைய நிலையில் ஈடு செய்ய முடியாதது என்றும் அவரின் மனைவிக்கும் மகனுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் தனது சார்பிலும், அரசின் சார்பிலும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# சுறாமீன் கடிக்கு இலக்கானவருக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை

(தீவகம்)

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவத் தொழிலாளி ஒருவர் பெரிய சுறா மீன் கடிக்கு இலக்காகி பலத்த காயத்துடன் மயக்க நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டு சிகிச்சைக்குட் படுத்தப் பட்டுள்ளார்.

இச் சம்பவம் வேலணை வெள்ளைக் கடற்கரைப்பகுதியில் நேற்று இடம் பெற்றிருக்கின்றது. இச் சம்பவத்திற்கு இலக்கானவர் வேலணை செட்டிபுலத்தைச் சேர்ந்த க. அமிர்தலிங்கம் (அமீர்) (வயது 33 என்ற இளைஞராவர். (க)

# பல்கலைக்கழகங்களிலே கல்வி கற்று வெளியேறுவோர்கள் சொந்த மாவட்டங்களிலேயே கடமை புரியவேண்டும்

(வவுனியா)

வடக்கு கிழக்கு மாவட்ட அரசாங்க வைத்திய சாலைகளில் போதிய வைத்திய அதிகாரிகள், சிறப்பு நிபுணர்கள் இல்லை, பின்தங்கியமாவட்டமாக வவுனியா இருக்க முடியாது. மாவட்டத்தின் வளர்ச்சி அபிவிருத்தி வேகத்துடன் இடம்பெற வேண்டுமானால் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்கள் தமது மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் சேவையாற்ற முன் வரவேண்டும் என வவுனியா அரசாங்கஅதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில்நேற்று முன் தினம் நடைபெற்ற 36 மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதே கருத்தினை இந்த விழாவில் சிறப்புரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகப் பேராசிரியர் எஸ்.நந்தகுமார் வலியுறுத்தினார்.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரித் தலைவர்எஸ்.அழகரட்ணம் சிறப்புரை ஆற்றினார்.

வவுனியா பிரதேச செயலாளர் திருமதி மேரி இமெல்டா சுகுமார் செட்டிகுளம் பிரதேச செயலாளர் செல்வி ரி. துரைச்சாமி தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி வி. ஒல்வேல்ட் வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளர்எஸ் பொன்னையா உட்பட அரசாங்க திணைக்களத் தலைவர்கள் பலரும் இந்த வைபவத்தில் பங்கு கொண்டனர். (க)

### யாழ். ஆஸ்ப்பத்திரி வீதி

# தமிழ்ப் பெரியார்கள் சிலைகள் அவசியம் புனரமைக்கப்பட வேண்டும்

]யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஆஸ்ப்பத்திரி வீதியில் அமைந்துள்ள தமிழ்ப் பெரியார்களின் நான்கு சிலைகளையும் புனரமைக்கும் பணிகளை யாழ். மாநகரசபை பொறுப்பேற்க வேண்டுமென யாழ், வர்த்தகப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் மேற்படி சிலைகள் நான்கும் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாண வர்த்தகப் பிரமுகர்களினாலேயே கட்டப்பட்டதாகவும் ஆனால் இடைப்பட்ட காலங்களில் இச்சிலைகள் மீது போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்

இச்சிலைகளை பராமரிப்பதன்மூலம் மறைந்த தமிழ்ப் பெரியார்களை இளம் சந்ததியினர் நன்கு அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளனர்.


**காணவில்லை**

**சுவாமிநாதன் இலட்சுமியம்மா**

(வயது 61) என்பவரை நேற்றுப் பகல் 11-30 மணியளவிலிருந்து காணவில்லை. நரைத்த தலைமயிர், றோஸ்நிறச் சாறியும், சிவப்பு நிற மேற்சட்டையும் அணிந்திருந்தார். இவரது சொந்த விலாசம் வல்வெட்டி, பள்ளியவத்தை, வல்வெட்டித்துறை.

மன நோயாளியான இவரைக் கண்டவர்கள் தயவு செய்து ஆ. ஜெயக்குமார் இல 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தகவல் தரவும். (00118)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.